கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 25.03.2025

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தொழில்சார் கல்விப் பயிலரங்கம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய திறமை மேம்பாடு மற்றும் செம்மை பயிலகம் மற்றும் பர்ஸ்ட் ஜாப் ஹியூமன் கேப்பிட்டல் இணைந்து, "எதிர்கால ஆயத்த பணியாளர்களை உருவாக்குதல் என்ற தலைப்பில், இறுதியாண்டு பி.டெக். (உணவுத் தொழில்நுட்பம்) மாணவர்களுக்கான தொழில்சார் கல்விப் பயிலரங்கை 22.03.2025 அன்று ஏற்பாடு செய்தது. உணவு பதன் செய் பொறியியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எம்.பாலகிருஷ்ணன் தனது வரவேற்புரையில் பி.டெக் (உணவு தொழில்நுட்பம்) பட்டப்படிப்பு பற்றிய விரிவான கண்ணோட்டத்தை வழங்கினார்.

வேளாண் பொறியியல் முதன்மையர் முனைவர் அ.ரவிராஜ் கல்வித்துறையை தொழில்துறையுடன் இணைப்பதன் முக்கியத்துவத்தை குறிப்பிட்டு, மாணவர்கள் இந்த வாய்ப்புகளில் முழுமையாக ஈடுபடுமாறு ஊக்குவித்தார். பின், திரு.முரளி காசிநாத், ஸ்கில் இந்தியா நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி, தொழில் மற்றும் கல்வியின் மேம்பாட்டிற்கான ஒத்துழைப்பின் முக்கியத்துவம் குறித்து மகத்தான பார்வையை வழங்கினார். அடுத்து, திரு. டி.வி.சூர்யா நாராயணன், ஜெனரல் மேனேஜர் – வணிக செயல்பாடுகள், எஸ்.பி. ரிட்டெயில் வெஞ்சர்ஸ் லிமிடெட், "படிப்பதிலே படிவது" என்ற தலைப்பில் சிறந்த உரை வழங்கினார். திரு. பொன் அண்ணாதுரை, மனிதவளத் தலைவர், உண்மைப் பயன்பாட்டு நிகழ்வுகளைப் பகிர்ந்து, மாணவர்களின் ஆர்வத்தை மேலும் தூண்டினார். திரு. கோ. நாகராஜன், சீனியர் மேனேஜர், மனிதவளத் தலைவர், ஹண்டர் டாக்லெஸ், நேர்காணல்களில் வெற்றிபெறுவதற்கான முக்கிய உத்திகளை விளக்கினார். கேள்வி பதில் அமர்வில், மாணவர்கள் ஆர்வமுடன் பங்கேற்றனர், மொத்தம் 60 மாணவர்கள் இந்த பணியகத்திலிருந்து பயனடைந்தனர். நிகழ்ச்சியின் நிறைவில், பங்கேற்ற மாணவர்கள் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இறுதியாக முனைவர் ச. பர்வீன், வேலைவாய்ப்பு ஒருங்கிணைப்பாளர், உணவு பதன் செய் பொறியியல் துறை, இந்த நிகழ்ச்சியின் வெற்றிக்கு பங்களித்த அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்தார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**